**Starting time 10.55 A.M.**

# IN THE COURT OF THE SPECIAL SUB JUDGE TO DEAL WITH L.A.O.P. CASES, ARAKKONAM.

## O.S. No. 117/2025

Deposition of **D.W.3** witnesses for Respondent Solemnly affirmed by Tmt. S. Vennila, Sheristadar of this court, on 11.08.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **குமார்** Father's Name :

Address : **மண்டல துணை வட்டாட்சியர், சோளிங்கர்**

Age :

**சோளிங்கர் வட்டாட்சியருக்கு அழைப்பாணை சார்வாகி, வாதிகள் தரப்பில் முதல் விசாரணை :** நான் சோளிங்கர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். இந்நீதிமன்றத்தில் இருந்து வட்டாட்சியருக்கு அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2, 3 ஒப்படைவு சம்மந்தப்பட்ட கோப்புக்கள் எங்கள் அலுவலகத்தில் உள்ளதா என்றால், இல்லை. வா.சா.ஆ.2 மற்றும் 3 ஒப்படைவு உத்தரவில் உள்ள சர்வே எண் 480/1–ல் 17 செண்ட் நிலமானது எங்கள் அலுவலக கோப்புகளில் காலி நத்தம் அரசு நிலம் என உள்ளது. அந்த சொத்தினை பொறுத்து எங்கள் அலுவலகத்தால் இதுவரை யாருக்கும் பட்டா ஒப்படைவு செய்யப்படவில்லை.

3. வீட்டுமனை பட்டா வழங்கப்படும் போது பொதுவாக ஒரு நபர் பெயரில் 3

செண்ட் விஸ்தீரணத்திற்கு மட்டுமே பட்டா வழங்கப்படும். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மேற்பட்டவர்கள் பெயரில் பட்டா ஒப்படைவு செய்யப்படுவதில்லை. ஒரு குடும்ப உறுப்பினர்களில் யாராவது ஒருவர் அரசுப் பணியில் இருந்தால், அவர்கள் பெயரில் இலவச வீட்டு மனை பட்டா வழங்கப்படுவதில்லை. அதேபோல் தற்போது முன்னாள் ராணுவத்தினருக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் நடைமுறை எதுவும் இல்லை.

4. அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள நிலம் குறித்து வட்டாட்சியர் அளித்த கடிதம் தாக்கல் செய்கிறேன். அது **Ex.X1**–ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண் 480/1–க்கான நத்தம் நிலவரித் திட்ட அடங்கல் பதிவேட்டின் நகலையும், சர்வே எண் 480–க்கான புலவரைபடத்தின் நகலையும் தாக்கல் செய்கிறேன். அவைகள் **Ex.X2, Ex.X3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

5. நான் எந்த வருடம் அரசுப் பணியில் சேர்ந்தேன் என்றால், 2012–ம் ஆண்டு பணியில் சேர்ந்தேன். எந்த வருடம் முதல் துணை வட்டாட்சியராக பதவி உயர்வு பெற்றேன் என்றால், 2020 முதல் துணை வட்டாட்சியராக பணி புரிகிறேன். வா.சா.ஆ.2, 3 ஒப்படைவுகள் அரக்கோணம் வட்டாட்சியரால் 1997–ம் ஆண்டு வழங்கப்பட்டதாக உள்ளது என்றால், சரிதான். அந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான். அந்த ஒப்படைவுகளில் கையெழுத்து செய்துள்ள வட்டாட்சியருக்கு தான் அந்த விவரங்கள் நேரடியாக தெரியும் என்றால், சரிதான், பின்னிட்டு வரும் அலுவலர்களுக்கு ஆவணங்கள் மூலமாக தெரியும்.

6. நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு, வா.சா.ஆ.2, 3 ஒப்படைவுகள் சம்மந்தமாக நான் அரக்கோணம் வட்டாட்சியர் அலுவலகத்தில் விசாரணை எதுவும் செய்தேனா என்றால், நானும், எனது அலுவலக

பணியாளர்களும் அரக்கோணம் வட்டாட்சியர் பதிவறைக்கு சென்று வா.சா.ஆ.2, 3 ஒப்படைவுகள் சம்மந்தமாக கோப்புக்கள் எதுவும் உள்ளதா என தேடிப் பார்த்ததில் அதுபோல் ஒப்படைவுகள் எதுவும் இல்லை என தெரிய வந்தது. மேலும் வா.சா.ஆ.2, 3 ஒப்படைவுக்கு பின்னிட்டு தோராயப் பட்டா வழங்கப்பட்டு அதன்பிறகு கணினி பட்டா வழங்கப்பட்டிருக்க வேண்டும், அந்த ஒப்படைவுகளுக்கு பின்னிட்டு பயனாளிகள் ஒப்படைவு பெற்ற சொத்தில் வீடு கட்டி அனுபவித்து வந்திருக்க வேண்டும், ஆனால் வா.சா.ஆ.2, 3–ல் உள்ள நபர்கள் யாரும் அந்த சொத்தில் வீடு கட்டி அனுபவித்து வராமல் அந்த இடம் இன்று வரை காலிஇடமாகவே உள்ளது.

7. அரக்கோணம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நான் ஆவணங்களை சரிபார்த்து சம்மந்தமாக கோப்புக்கள் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. வா.சா.ஆ.2, 3 ஒப்படைவுகளில் ஒரு பயனாளிக்கு 3 செண்டிற்கும் அதிகமாக ஒப்படைவு செய்யப்பட்டதாக இல்லை என்றால், சரிதான். தாவா சொத்தை அலமேலம்மாள் என்பவர் கிரையம் பெற்றுள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால், தெரியாது.

8. அரசுக்கு சொந்தமான சொத்தின் நிலங்களை பதிவு செய்வதற்கு தடை உள்ளது என சார் பதிவாளரிடம் கடிதம் எதுவும் கொடுத்துள்ளோமா என்றால், அது போன்ற நடைமுறை தற்போது தான் உள்ளது, இதற்கு முன்னால் இல்லை. அதுபோன்று இதற்கு முன்னர் இல்லை என நான் தவறாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

9. தாவா சொத்து அலமேலம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றும், அதன் அடிப்படையில் தான் வா.சா.ஆ.2, 3 ஒப்படைவுகள் வழங்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. வா.சா.ஆ.2, 3 ஒப்படைவுகளுக்கு பின்னிட்டு எங்கள் அலுவலக பதிவேடுகளில் உரிய பதிவுகள் மேற்கொள்ளாததை சாதகமாக கொண்டு, தற்போது

வா.சா.ஆ.2, 3 ஒப்படைவுகள் பொய்யானது என தவறாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

பிரதிவாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

**Ending time :11.22 A.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.08.11 18:17:13 +0530